உன்னைப் புரிந்துகொள்

சகோ. அகஸ்டின் ஜெபக்குமார்

> **நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார். நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே, கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும். ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.** ரோமர் 8:16-18

கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் யார்? என்பதை அறிந்திருந்தோமானால், நம்முடைய வாழ்க்கையை நாம் சாதாரணமாகக் கருதமாட்டோம். நாம் இவ்வுலகத்தில் இருந்தாலும், தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றோம் என்று வேதம் சொல்லுகின்றது. இந்த உலகத்தில் காணப்படும் மக்கள் கூட்டத்தை இரண்டாகப் பிரிக்கலாம் ஒன்று சாத்தானின் பிள்ளைகள் மற்றொன்று தேவனின் பிள்ளைகள். பிசாசானவன் பொய்யனும், கொலைபாதகனுமாயிருக்கிறான் என்று இயேசு ஜனங்களைப் பார்த்துச் சொன்னபோது, ஜனங்களோ: நாங்கள் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளாயிருக்கின்றோம் என்று சொன்னார்கள். அதற்கு இயேசு: ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே என்று அவர்களிடமே மாறுத்தரம் சொன்னார். **நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்.** ரோமர் 8:16

இங்கிலாந்து ராணி விக்டோரியாவைக் குறித்து நாம் எல்லோரும் நன்கு அறிந்திருக்கின்றோம். அவர் சிறுவயதாயிருந்தபோது, அவளது தகப்பனார், மக்களின் கஷ்டங்களையும் உண்மையான நிலமைகளையும் மகள் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக அவளை சாதாரண மக்கள் சேர்ந்து படிக்கின்ற பள்ளியிலேயே சேர்த்தார். அத்துடன், நீதான் வரப்போகின்ற ராணி என்று அவளுக்குச் சொல்லக்கூடாதென்று, ஆசிரியருக்கும், சக மாணவர்களுக்கும் திட்டமாகக் கட்டளையிட்டிருந்தார். இந்நிலையில் சரித்திர ஆசிரியர் ஒருநாள் இங்கிலாந்து நாட்டின் சட்டதிட்டங்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படிச் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருக்கும் போது, இங்கிலாந்து நாட்டின் சட்டப்படி இராஜாவுக்குப் பிறக்கின்ற முதல் பிள்ளை ஆணானாலும், பெண்ணாகிலும் அதுவே இங்கிலாந்தை ஆள உரிமை பெற்றது என்று சொன்னார். இப்படி அவர் சொல்லிக்கொடுத்தபின்பு விக்டோரியாவை நோக்கி: உனக்குப் புரிந்ததா? என்று கேட்டதற்கு, விக்டோரியாவும் 'புரிந்தது' என்று பதில் சொன்னாள். ஆசிரியர்: என்ன புரிந்தது? என்று கேட்டதற்கு, விக்டோரியா, 'நான் தான் வரப்போகிற மகாராணி' என்று புரிந்தது என்று பதில் சொன்னாள். அப்போது ஆசிரியர் இனி நீ எப்படி நடந்துகொள்வாய் என்று கேட்டதற்கு, விக்டோரியாவோ, '**நான் இனி ராணியைப்போல நடப்பேன்**' என்று பதில் சொன்னாள்.

ஊழியனிலும் உயர்ந்த அந்தஸ்து

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும், புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்கும் உள்ள மிகப் பெரிய வித்தியாசம் இதுவே. பழைய ஏற்பாட்டில் தேவன் யாரையாவது பார்த்து **'எனது பிள்ளை'** என்று சொன்னதுண்டோ? ஆபிரகாம் நம்புவதற்கு ஏதுவில்லாதிருந்தும் நம்பிக்கையோடு விசுவாசித்தான்; சரீரம் செத்துப்போனதென்று அறிந்திருந்தாலும், தேவன் சொன்னதைச் செய்ய வல்லவராயிருக்கிறாரென்று நம்பினான். இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன் தனக்கு ஒரு குழந்தையைத் தர முடியும் என்று விசுவாசித்தான். தன்னுடைய மகனையே பலிபீடத்தில் தேவனுக்கென்று வைக்குமளவிற்கு விசுவாசத்தில் வல்லவனாயிருந்தான். அப்படிப்பட்ட விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைப் பார்த்துகூட **'என் தாசனாகிய ஆபிரகாம்'** என்றே தேவன் வர்ணித்தார். தாசன் என்பதற்கு ஆங்கிலத்தில் 'My Servant' என்றே அர்த்தம்.

செங்கடலை இரண்டாகப் பிளந்து, நாற்பது ஆண்டுகள் முப்பத்திரண்டு இலட்சம் ஜனங்களை தான் ஒருவனாய் நடத்தினவனுமாகிய மோசேயைக் குறித்தும் தேவன் **'என் தாசனாகிய மோசே'** என்றே கூறினார். யோர்தானைப் பிரித்தவனும், இஸ்ரவேலின் ஜனங்களை இரட்சித்து நடத்தினவனும், எரிகோவின் மதிலை சுற்றிவந்து வெற்றி பெற்றவனுமாகிய யோசுவாவைக் குறித்தும் 'கர்த்தருடைய தாசனாகிய யோசுவா' என்றே சொன்னார். ஆண்டவருடைய காலைப் பிடித்துக்கொண்டு, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை விடமாட்டேன் என்று சொல்லி, மனிதனோடும் தேவனோடும் போராடி மேற்கொண்டவனாகிய யாக்கோபைக் குறித்தும் **'என் தாசனாகிய யாக்கோபு'** என்றே தேவன் சொன்னார். பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் அனைவரையும் தேவன் ஊழியக்காரர்கள் என்றுதான் அழைத்தார்; ஆனால் நம்மைப் பார்த்தோ தேவன் **'நீங்கள் என்னுடைய பிள்ளைகள்'** என்று அழைக்கிறார்.

> **பாடுபடவேண்டுமா! வேண்டாம் நாங்கள் பிள்ளைகளாயல்ல, தாசர்களாகவே இருந்துவிடுகின்றோம் என்று அநேகர் பிள்ளையின் ஸ்தானத்தை இழந்துவிடுகின்றனர்.**

கிறிஸ்துவுக்குள் நாம் யார்? என்பதை நாம் அறிந்துகொள்வது மிக அவசியமான ஒன்று. புது கார் ஒன்றை ஒருவர் வாங்கி, அதை ஓட்டுவதற்கு ஒரு ஓட்டுநரையும் புதிதாக நியமித்து, அந்த ஓட்டுநர் ஓட்டிச்சென்ற முதல் நாளிலேயே காரை மரத்தில் மோதிவிட்டால் அவர் என்ன செய்வார்? ஓட்டுநரை வேலைக்கு வேண்டாம் என்று சொல்லி வீட்டிற்கு அனுப்பிவிடுவார். ஆனால் அதே காரை அவரது மகன் ஓட்டிச்சென்று மோதிவிட்டால், தகப்பன் என்ன சொல்லுவார், மகனே நீ எப்படி இருக்கிறாய்? உனக்கு ஏதும் அடி இல்லையே, என்று தன் மகனையே அவர் அதிகம் விசாரிப்பார். காரைக்குறித்த கவலை அல்ல, தன் மகனைக் குறித்த கரிசனையே அவரில் மேலோங்கியிருக்கும். நாம் காரை உடைத்துவிட்டு வந்தாலும், நம்முடைய எலும்பைக் குறித்து கவலைப்படுகின்ற நல்ல ஆண்டவர் நமக்கு இருக்கின்றார். எனவேதான் வேதம், நம்மையல்லாமல் அவர்கள் பூரணராகாதபடிக்கு, விசேஷித்தமான நன்மையான ஒன்றை, நமக்காக தேவன் முன்குறித்திருந்தார் என்று சொல்லுகின்றது.

மகிமைப்படுத்த அல்ல மகிமைப்பட

> **நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே, தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே, கிறிஸ்துவுடனேகூட நாம் மகிமைப்படும்படிக்கு அவருடனேகூடப் பாடுபட்டால் அப்படியாகும்.** ரோமர் 8:17

பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை நோக்கி தேவன்: நீ என் தாசன் உன்னில் நான் மகிமைப்படுவேன் என்று சொன்னார். ஆனால் புதிய ஏற்பாட்டு காலத்தில் அவரது பிள்ளைகளாகிய நம்மைப் பார்த்தோ வேதம், நாம் மகிமையடைவோம் என்று கூறுகின்றது. வேலைக்காரர்களை தேவன் மகிமைப்படுத்துவார், ஆனால் பிள்ளைகளாகிய நாமோ மகிமையடைவோம். கார் ஓட்டுகிற ஒருவர் நன்றாக வேலை செய்தால், முதலாளி அவருக்கு போனஸ் வழங்குவது வழக்கம். இன்றும் அநேகம் பேர் ஆண்டவரிடம் ஏதாகிலும் ஒரு அற்புதம் நடக்காதா, ஆசீர்வாதம் கிடைக்காதா என்று போனஸ் வாங்கவே வருகின்றனர். நாம் தேவனுடைய பிள்ளைகளானால், போனஸ் அல்ல அவரது மூலதனமே நமக்காகத்தான். அவரோடே கூட பாடுபட்டால் அப்படியாகும் என்ற ஒரு நிபந்தனையையும் நாம் அந்த வசனத்தில் காணமுடியும். பாடுபடவேண்டுமா! வேண்டாம் நாங்கள் பிள்ளைகளாயல்ல, தாசர்களாகவே இருந்துவிடுகின்றோம் என்று அநேகர் அந்த ஸ்தானத்தை இழந்துவிடுகின்றனர்.

இளைய குமாரனைப் போல வீட்டை விட்டு வெளியே இருந்தபோது, தகப்பனை விட்டு தூரத்தில் இருந்தபோது, பன்றியின் உணவை சாப்பிட்டது உண்மைதான், ஆனால்,அப்பாவின் வீட்டிற்கு வந்தபோதும் கூட **'உமது வேலைக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்'** என்றே கூறுபவர்களே இன்று ஏராளம். பன்றி மேய்த்துக்கொண்டிருந்த என்னை தேவன் தன்னுடைய வீட்டினுள் அனுமதித்ததோடு மட்டுமல்லாமல், என்னுடைய கைகளில் மோதிரத்தையும், கால்களில் பாதரட்சையையும் அணிவிக்குமளவிற்கு நான் தகுதியா? என்று ஒருவேளை நாம் நினைத்துக்கொண்டிருப்போமானால், நாம் வேலைக்காரனல்ல தேவனுடைய பிள்ளை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அவரோடு கூட பாடுபட்டால் மாத்திரமே அப்படியாகும் என்று வேதம் கூறுகின்றது. தகப்பன் அடிபட்டுக்கிடந்தால் வேலைக்காரன் தன்னுடைய நேரம் முடிந்தவுடன் போய்விடுவான், ஆனால் பிள்ளை அப்படியல்ல கூடவே இருப்பான். தொழிற்சாலையில் வேலை நேரத்தை ஈடுசெய்யும் படி கூடுதலாக நான்கு மணி நேரம் பணி செய்யும்படி கேட்டால், அவர்கள் அதற்கும் ஊதியம் வேண்டும், இல்லையென்றால் நாங்கள் பணிசெய்யமாட்டோம் என்று கூறுவார்கள். ஆனால் பிள்ளையோ அப்படியல்ல, தகப்பனோடேயே கூட இருந்து பாடுபட ஆயத்தமாயிருப்பான். இதுவே பிள்ளைக்கும் தாசனுக்கும் இடையே உள்ள வித்தியாசம். நான் கிறிஸ்துவின் உடன் பங்காளி; எனவே அவரோடு கூட பாடுபட நான் ஆயத்தம் என்ற உணர்வே நமக்குள் இருக்கவேண்டும்.

> **நாம் இயேசுவின் சிநேகிதர்களாயிருந்து அதனால் வரும் சிலாக்கியங்களை அனுபவிப்பவர்களாய் மாத்திரமல்ல, அவருடைய சிநேகிதர்களாயிருப்போமானால் அவருக்காக ஜீவனைக் கொடுக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.**

நாம் தேவனுடைய பிள்ளைகளென்றால், இந்த உலகம் எங்களை கண்டுகொள்வதேயில்லையே என்று அநேகர் சொல்வதுண்டு. ஒருவர் அணிந்திருக்கும் மோதிரம் நம்முடைய பார்வையில் வெறும் நாலாயிரம் ரூபாயாகக் காணப்படலாம், ஆனால் அதே மோதிரம் அவரது திருமண மோதிரமாக இருக்குமென்றால், அதனுடைய விலை அதை அணிந்திருப்பவரின் பார்வையில் விலைமதிப்பற்றது. அதைப்போலவே உலகத்திற்கு நாம் குப்பையாயிருக்கலாம், ஆனால் நமது அப்பாவின் பார்வையில் நாம் விலையேறப்பெற்றவர்கள். அந்த அன்பினிமித்தம் நோவா நீதியைப் பிரசங்கித்தான் என்று வேதம் சொல்துலுகின்றது. தன் காலத்தில் வாழ்ந்த எல்லாரைக் காட்டிலும் நோவா நீதிமானாயிருந்தான் என்றும் வேதம் சொல்லுகின்றது. தன்னையும் தன்னுடைய குடும்பத்தையும் தேவனுக்கு பயப்படுகின்ற பயத்தோடு காத்துக்கொண்டான் என்றும் அவனைக்குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய கட்டளையின்படி பேழையை உண்டுபண்ணிய நோவா கீழ்ப்படிதலுக்கு ஓர் முன்னுதாரணமாயிருக்கிறான். கீழ்ப்படிதலுக்கு உதாரணமாயிருந்த நோவாவையும் தேவன் பிள்ளை என்று சொல்லவில்லை, தாசன் என்றே சொன்னார். இன்பமான பாடல்களை

பாடிக்கொண்டிருந்த தாவீது, கோலியாத்தை வீழ்த்திய தாவீதைக்கூட தேவன் 'என் தாசனாகிய தாவீது' என்றுதான் அழைத்தார். தேவன் நம்மை பிள்ளை என்று அழைக்கிற இந்த ஒன்றே போதும், நாம் அவருக்காக மரிக்கவும் ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர் நம்மை பிள்ளை என்று அழைப்பதினாலே அவருக்காக பலியாகவும் நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பது யார்?

நாம் யார்? என்பதை நாம் அறிந்திருந்தோமானால், யாரும் நம்மை பயமுறுத்த முடியாது. நம்மை கொலைசெய்துவிடுவேன் என்று மிரட்டமுடியாது. என்னை பிள்ளை என்று அழைக்கும் என் தேவனுக்காக என் உயிரைக் கொடுக்கவும் நான் ஆயத்தம், என்ற வைராக்கியம் நமக்குள் உருவாகும்.

ஜீவனைக் கொடுக்கும் சிநேகிதன்

ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. நான் உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களானால், என்சிநேகிதராயிருப்பீர்கள் இனி நான் உங்களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான். நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். யோவான் 15:13-15

இயேசு நம்மை சிநேசிதர் என்றே அழைக்கின்றார். வேலைக்காரர்களிடத்தில் எஜமான் தன் எல்லா காரியங்களையும் சொல்லுவதில்லை, தான் போகவேண்டிய இடத்தை சொல்லலாம் ஆனால், போகும் காரியத்தின் இரகசியத்தை சொல்லுவதில்லை. ஆனால் தனது மகனிடத்திலோ அனைத்தையும் எஜமான் பகிர்ந்துகொள்கிறான். நாம் அவரின் வேலைக்காரர்களல்ல, அவரது பிள்ளைகள். நாம் அவரது பிள்ளைகள் மாத்திரமல்ல, அவரது சிநேகிதர்களுமாயுமிருக்கின்றோம். நாம் இயேசுவின் சிநேகிதர்களாயிருந்து அதனால் வரும் சிலாக்கியங்களை அனுபவிப்பவர்களாய் மாத்திரமல்ல, அவருடைய சிநேகிதர்களாயிருப்போமானால் அவருக்காக ஜீவனைக் கொடுக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம். தேவன் ஆபிரகாமைப் பார்த்து என் சிநேகிதனாகிய ஆபிரகாம் என்று சொன்னார். ஏனெனில், ஆபிரகாம் வேலைக்காரனாயிருந்தாலும் அவரது சிநேகிதனாயிருந்ததினால், நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ என்று சொன்னார். தேவன் நமது தேசத்தில் மாபெரும் காரியத்தைச் செய்யப்போகின்றார். நாம் அவருடைய சிநேகிதர்களாயிருப்போமென்றால் அதை நிச்சயம் அறிந்திருப்போம், வேலைக்காரர்களாயிருப்போமானால் அது நமது கண்களுக்கு மறைவாயிருக்கும். ஊழியக்காரர்களுக்குத் தெரியாதது சிநேகிதர்களுக்குத் தெரியும். தேவன் அவருடைய உள்ளத்திலுள்ள எல்லாவற்றையும் நமக்குச் சொன்னதினாலே நாம் அவருடைய ஊழியக்காரர்களல்ல, நாம் அவரின் சிநேகிதர்கள். சிநேகிதனுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் மேலான அன்பு இல்லை.

நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள்

இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு

புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். 2 கொரி 5:18-20

தேவன் நம்மை அவரது பிள்ளைகளாக்கியது மட்டுமல்ல, நம்மை அவரது சிநேகிதராக்கி அத்தோடு நம்மை அவரது ஸ்தானாபதியாகவும் மாற்றியிருக்கின்றார். அவரது நாட்டிற்காக பூமியிலிலே கிரியை செய்யும் உன்னத நிலைக்கு தேவன் நம்மை உயர்த்தியிருக்கின்றார். திராட்சைத் தோட்டத்தின் உவமையில், கனிகளை வாங்கிக்கொண்டுவரும்படி அனுப்பப்பட்ட ஊழியக்காரர்களை, தோட்டக்காரர்கள் பிடித்து அடித்து அத்தோடு கல்லெரிந்தும் கொன்றார்கள். **கடைசியிலே எஜமான்: என் குமாரனுக்கு அஞ்சுவார்கள் என்று சொல்லி, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.** (மத்தேயு 21:37). புழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஊழியர்களைக் கொண்டு கிரியை செய்த தேவன், இந்த கடைசி நாட்களில், தனது குமாரர்களைக் கொண்டே கிரியை நடப்பிக்க விரும்புகின்றார்.

நெப்போலியனின் ஆட்சிக் காலத்தில் எகிப்திலிருந்து ஒரு படை புறப்பட்டு அவனுக்கு விரோதமாக வந்தபோது, அவன் தனது ஸ்தானாபதியை அனுப்பி, தன்னை எதிர்க்கவேண்டாம் என்று எதிரிக்குச் சொல்லி அனுப்பினான். அப்படியே அந்த ஸ்தானாதிபதி புறப்பட்டுப்போனான், எகிப்தின் சேனாதிபதி எதிரே புறப்பட்டு வந்துகொண்டிருந்தான். எகிப்தின் சேனாதிபதியை அவன் கண்டவுடன் தன் கையிலிருந்த கோலினால் ஒரு கோட்டை வரைந்து, நெப்போலியனின் ஸ்தானாபதியாகிய நான் சொல்லுகிறேன், இந்த கோட்டை தாண்டிவரவேண்டாம் வந்தால், நடப்பது வேறு என்று தனியொருவனாய் எதிரியின் முன் நின்று சொன்னான். அப்படி அவன் சொன்ன மாத்திரத்தில், எதிரியின் படை கொஞ்சமும் முன்னேறாமல், அந்த கோட்டையே தாண்டாமல் நின்றுவிட்டது. நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதி நம்மைக் கண்டும் எதிரி நிச்சயம் பயப்படுவான். தனியொருவனாய் நாம் நின்றாலும் நமக்குப் பின்னே பரலோகத்தின் சேனைகள் உண்டு.

ஸ்தானாபதிகளின் பணி ஒப்புரவாகுதலின் ஊழியமே. அதற்காகவே தேவன் நம்மை இந்த பூமியில் அவருடைய ஸ்தானாபதிகளாக வைத்துவைத்திருக்கின்றார். நாம் அவருடைய பிள்ளைகளாக அவருக்காக பாடனுபவிக்கிறதற்கு, அவருடைய சிநேகிதனாக நமது ஜீவனையே அவருக்காகக் கொடுப்பதற்கு, அவருடைய ஸ்தானாபதியாக எந்த ஆபத்தையும் எதிர்கொள்ள ஆயத்தமாயும் இருப்போம். நம்மால் இந்த தேசம் சந்திக்கப்படட்டும்.